[1967 ஜூலை 17

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நிலைமைகளும், நிர்ப்பந்தமும் இந்தத் திசையிலே தான் நம்மை செலுத்திக் கொண்டிருக்கிறது. இப்பொழுது நம்மிடத்தில் 3,000 டன் துவரம் பருப்பு இருக்கிறது. இந்த மாநிலத்திற்கு ஒரு வருஷத்திற்கு ஒரு லட்சம் டன் தேவைப்படுகிறது. உத்திரப் பிரதேசத்தில் விளைச்சல் இல்லை. மேலும் பருப்பு வெளியே போகக்கூடாது என்ற தடை உத்திரவை வடக்கு மாநிலங்கள் போட்டிருக்கின்றன. இந்த நிலைகள் தான் நெருக்கடிக்குக் காரணமாகும்.

## நெல்லுக்கு பூரிப்பூதியம்

*357 வினு.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மதிப்பிற்குரிய உணவு—வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966-ம் ஆண்டு ஜனவரி முதல் வடாற்காடு மாவட்டத்தில் நெல் கொள்முதல் செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்து போனஸ் கோரி வந்த மனுக்கள் எத்தனை ?

(இ) அவைகளுள் முடிவெடுக்கப்பட்ட மனுக்கள் எத்தனை ?

(உ) பெண்டிங்காக வைக்கப்பட்ட மனுக்கள் எத்தனை, தாலுகா வாரியாக ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) வட ஆற்காடு மாவட்ட உழவர்களிடமிருந்து 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் பூரிப்பூதியம் (போனஸ்) வழங்கும்படி வேண்டி 8,529 மனுக்கள் வந்துள்ளன. இதற்கு முன்பு பூரிப்பூதியத் திட்டம் எதுவும் இல்லை.

(இ) எல்லா மனுக்களும் கீழ்க்கண்ட முறையில் முடிவு செய்யப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (1) ஒப்பளிப்பு வழங்கப்பட்டவை | .. | 6,829 |
| (2) மறுக்கப்பட்டவை | .. .. | 1,700 |
| மொத்தம் | .. | 8,529. |

(உ) இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** போனஸ் வழங்கப்படுவதில் மிகவும் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இத்தனை மனுக்கள் பைசல் ஆகவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பைசல் ஆகாத மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து, போனஸ் வழங்குவதில் காலதாமதம் இருக்கக் கூடாது. பெண்டிங் மனுக்களை உடனடியாக பைசல் செய்வதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பெண்டிங்காக இன்னும் மனுக்கள் இருக்கின்றன. போனஸ் வரும் என்று உறுப்பினர் தவருகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். காலதாமதம் ஆனது உண்மைதான். அதற்கு காரணம் இருந்தது. இந்த போனஸ் விஷயம் ஆகஸ்டு மாதம் முடிவு செய்யப்பட்டது. கொள்முதல் வேலைகளில் கலெக்டர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்ததினுல், இது சம்பந்தமான மனுக்களை சேகரித்து போனஸ் வழங்குவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது. நான் படித்த பதிலில் 6829 மனுக்கள்பேரில் போனஸ் வழங்கப்பட்டிருக்கிறது என்றும், மீதி 1700 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன என்றும் தெரிவித்தேன். ஆகவே இன்னும் போனஸ் கொடுக்கப்பட வேண்டியவர்கள் யாராவது இருக்கிறார்கள் என்று கருதினுல், அது சரியானது அல்ல.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்த ஆயிரத்துச்சொச்சம் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்கான காரணங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** காரணம், அந்தப் போனஸுக்கு வேண்டிய தகுதி அவர்களுக்கு இல்லை. அவர்கள் அதற்கு உரியவர்கள் அல்ல என்பதுதான் அதற்குப் பொருள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வட ஆற்காடு பற்றிய வினா இது. அதைப்பற்றி திரு. கே. சகாதேவ கண்டர். துணை வினா கேட்பார்கள்.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** இந்தமாதிரி போனஸ் என்ற கணக்கை வைத்துக்கொண்டு பல அவஸ்தைகள் படுவதைவிட, சில விவசாயிகள் இதனால் ஏமாந்துபோய்க் கொண்டிருக்கிற நிலைமைகள் இருப்பதினால், இந்த போனஸை நெல்லின் விலையோடு சேர்த்துக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம உண்டா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது வட ஆற்காடு பற்றிய வினா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படிச் செய்யலாமா என்பதைத்தான் இந்த அரசாங்கம் இப்பொழுது பரிசீலித்துக்கொண்டு வருகிறது.

**திரு. எஸ். முருகையன் :** வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனையோ விவசாயிகள் நெல் கொடுத்தார்கள். 8,529 மனுக்கள் வந்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல விவசாயிகள் பில்லை வாங்கி சேர்த்து உரிய காலத்தில் போனஸுக்காக மனுச் செய்துகொள்ள முடியவில்லை. ஆகவே, மொத்தமாக எத்தனை விவசாயிகள் நெல்லைக் கொடுத்தார்கள் என்று பரிசீலனை செய்து, வந்த மனுக்கள் போக, இன்னும் போனஸ் கொடுக்கப்படாமல் இருக்கும் விவசாயிகளுக்கு, அவர்களுடைய மனுக்களை சேகரித்து, அவர்களுக்கும் போனஸ் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது தீர்ந்துபோன விவகாரம். இதைத் திரும்பவும், மீண்டும் பரிசீலனை செய்யச் சொல்வது நல்லது அல்ல. இனிமேல் ஜாக்கிரதையாக இருக்கச்சொல்லி அங்கத்தினர் அவர்கள் விவசாயிகளுக்கெல்லாம் சொல்லவேண்டும்.

**THIRU T. MARTIN :** Sir, may I request the Hon. Minister to state whether this Government will issue directions to the procurement officials to settle the bonus claims immediately then and there ?

**MR. SPEAKER :** Does this question relate to North Arcot ?

**THIRU T. MARTIN :** Yes, Sir.

**THE HON. THIRU K. A. MATHIALAGAN :** Sir, I will answer the question.

Collectors were instructed to prepare procurement registers and other relevant registers villagewise. But even before the issue of this order, procurement was in swift progress in almost all the districts and they were not able to prepare these registers quickly. That is the reason why it was delayed.